# அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில்,
# திருவேற்காடு,
# சென்னை—77.

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு.**

இணை ஆணையர்/செயல்அலுவலர் அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு, சென்னை—77 அவர்களால் **20.03.2017 அன்று மதியம் 3.00 ணி** வரை கீழ்கண்ட பணிகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்புடைய பணிகளில் அரசு நிறுவனங்களில் தகுதியின் அடிப்படையில் பதிவு பெற்ற அனுபவம் வாய்ந்த பதிவு நடப்பிலுள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் **அன்றே மதியம் 3.30 மணிக்கு** வருகைதந்த ஒப்பந்ததாரர்கள் மற்றும் துறை அலுவலர்கள் முன்னிலையில் இணை ஆணையர்/செயல் அலுவலரால் திறக்கப்படும்.

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **பணியின் தோராய மதிப்பு** | **ஒப்பந்த காலம்** | **முன் வைப்புத் தொகை** | **ஒப்பந்தப் படிவத்தின் விலை** | **ஒப்பந்ததாரர் தகுதி** |
|---|---|---|---|---|---|---|
| 1 | புதியதாக நந்தவனம் அமைத்தல் பணி | ரூ. 12,78,432/— | 60 நாட்கள் | ரூ.12,800/— | 6000 + 5% மதிப்புக் கூட்டுவரி | அரசு துறையில் பதிவு பெற்ற அனுபவம் வாய்ந்த ஒப்பந்ததாரர் |

ஒப்பந்தப்புள்ளிகள் **07.03. 2017** முதல் **20.03.2017** வரை சான்றிதழ்களை அளித்து ஒப்பந்தப்படிவ விலையினை திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். விலைவிகித மாறுதல் (Price adjustment clause) இந்த ஒப்பந்ததத்திற்கு பொருந்தாது. உடன்படிக்கையில் உள்ள விலை விகிதங்கள் ஒப்பந்த காலம் முழுமைக்கும் மாறுதலுக்கு உட்படாமல் இருக்கும். பணியினை முடிக்கும் காலம் வரை விலை விகிதங்கள் மாற்றம் செய்ய இயலாது. காரணம் ஏதும் தெரிவிக்காமல் ஒரு குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளியை அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் நிராகரிக்கும் அதிகாரம் இத்திருக்கோயில் இணை ஆணையர்/ செயல் அலுவலருக்கு உண்டு. ஒப்பந்தப்புள்ளி திறப்பு தேதி மாற்றுதலுக்குட்பட்டது. இதர விவரங்கள் திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தெரிந்துகொள்ளலாம்.

முனைவர் ந. தனபால் . **M.Sc., B.L.I.S.,B.L., D. Litt.,Ph.D.,**
இணைஆணையர்/ செயல் அலுவலர்/ தக்கார்.